மேலும், தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழும நிர்வாகக் குழு, மாநில நூலகக் குழு ஆகியவற்றிற்கு தலா மூன்று உறுப்பினர்களையும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் நிர்வாகக் குழுக்களுக்கு தலா ஓர் உறுப்பினரையும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் கோரிக்கைகள் வந்துள்ளன. தேந்தெடுக்கப்பெறும் உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்றாண்டுகளாகும்.

தமிழ்நாடு அனாதை இல்லங்கள் மற்றும் கருணை இல்லங்கள் நிர்வாகக் குழுவிற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இவற்றிற்குத் தேர்ந்தெடுக்கப்பெறும் உறுப்பினர்களின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகளாகும்.

ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழகங்களின் சட்ட அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும். தேர்ந்தெடுக்கப்பெற விழையும் வேட்பாளர்கள் தங்கள் நியமனத் தாள்களை 3–9–2001 (திங்கட்கிழமை) அன்று பிற்பகல் 3–00 மணிக்குள் பேரவை முதன்மைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் பேரவை முதன்மைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனத் தாள்கள் 4–9–2001 (செவ்வாய்க்கிழமை) அன்று பிற்பகல் 3–00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 5–9–2001 (புதன்கிழமை) அன்று பிற்பகல் 3–00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 7–9–2001 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10–00 மணிக்கும், பிற்பகல் 1–30 மணிக்கும் இடையே சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(ஆ) மானியக் கோரிக்கைகள், 2001–2002, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2001–2002 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

2001 ஆகஸ்ட் 27] [பேரவைத் தலைவர்]

"In pursuance of Clause 3 of Article 203 of the Constitution of India I, C. Rangarajan, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for grants for the financial year 2001-2002."

7. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்

(அ) கோரிக்கை எண் 17 – கல்வி

(ஆ) கோரிக்கை எண் 51 – தமிழ் வளர்ச்சி–பண்பாடு

(அ) கோரிக்கை எண் 17 – கல்வி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2001–2002 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 17–கல்வி. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.*

* **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.4978,84,52,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 135, திரு. சி. ஞானசேகரன்.*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூரில் அரசு பெண்கள் கல்லூரி ஒன்றினை இவ்வாண்டு தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4978,84,52,000–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 842, திரு. டி.பி.எம். மைதீன்கான்.*